நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆண்டிபட்டி.

முன்னிலை–திரு.அ.பாசில் முகமது,B.B.A.,LL.B(HONS)
நீதித்துறை நடுவர்
ஆண்டிபட்டி.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை
ஆண்டுபட்டிகை வழக்கு எண்:252/2015

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
கடமலைக்குண்டு காவல் நிலையம் ,
குற்ற எண்.188/2015. குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

துரைப்பாண்டி
எதிரி

**வழக்கின் சுருக்கம்**

| வ. எண் | விவரம் | |
|---|---|---|
| 1. | இருதரப்பினர்களின் பெயர்கள் | |
| | குற்றமுறையீட்டாளர்:<br>காவல்ஆய்வாளர்,<br>கடமலைக்குண்டு<br>காவல்நிலையம். | எதிரி:<br>துரைப்பாண்டி |
| 2. | எதிரியின் வயது | 31 |
| 3. | தந்தை/கணவர் பெயர் | த.பெ.நல்லதம்பி |
| 4. | மதம் | இந்து |
| 5. | தொழில் | டிரைவர் |



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:41:23 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | முகவரி | சில்குவார்பட்டி காலனி, தேவதானப்பட்டி | | |
| 7. | தாலுகா, மாவட்டம் | பெரியகுளம் தாலுகா, தேனி மாவட்டம் | | |
| 8. | சம்பவம் நிகழ்ந்த நாள் | 27.07.2015 | | |
| 9. | கைது | - | | |
| 10. | பிணையில் விடுவித்தல் | - | | |
| 11. | எதிரி சிறையில் இருந்த நாட்கள் | - | | |
| 12. | இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 21.12.2015 | | |
| 13. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | 21.12.2015 | | |
| 14. | கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் நகல் வழங்கப்பட்ட தேதி | 21.06.2016 | | |
| 15. | கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 01.09.2016 | | |
| 16. | விசாரணை துவக்கம் | 15.11.2018 | | |
| 17.சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள் | | Witness | Chief | Cross |
| | | PW1 | 15.11.2018 | 09.07.2025 |
| | | PW2 | 15.11.2018 | 05.08.2025 |
| | | PW3 | 15.11.2018 | 05.08.2025 |
| | | PW4 | 15.11.2018 | - |
| | | PW5 | 23.01.2026 | 23.01.2026 |
| 18. | விசாரணை முடிவு | 21.07.2026 | | |
| 19. | கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் | 21.07.2026 | | |



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:41:31 +0530

| | | |
|---|---|---|
| | கேள்வி கேட்கப்பட்ட நாள் | |
| 20.பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள் | | U/s.348 BNSS petition allowed |
| 21. | தீர்ப்பு விவரம் | எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 279, 337& 304(A) IPC ன் கீழான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு இடமில்லாமல் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் எனவே, எதிரியை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல என்றும் தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 255 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. |
| 22. | தீர்ப்புரை நகலை வழங்குதல் | ஆம். |
| 23. | தலைமறைவாக இருந்த எதிரிகளின் விவரங்கள் | - |
| 24. | மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு | இல்லை. |
| 25. | பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு | இல்லை. |
| 26. | காலதாமதத்திற்கான காரணம் | 2026-ஆம் வருடத்தில் தான் அரசுத்தரப்பில் சாட்சிகள் முன்னிடப்பட்டது. |



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:41:38 +0530

இவ்வழக்கானது, கடந்த 21.12.2015 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னால் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தனசேகரன் அவர்களும் முன்னிலையாகி, முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், அரசு தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>தீர்ப்புரை</u>

1). <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

கடந்த 27.07.2015 ம் தேதி மாலை சுமார் 05.40 மணிக்கு அய்யனார் கோவில் வடக்குப்பக்கம் உள்ள தன்னாசி தோட்டம் முன்பு உள்ள க.விலக்கு –கடமலைக்குண்டு மெயின்ரோட்டில் எதிரி TN 60 K 2415 Hero Honda என்ற வாகனத்தினை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும், தெற்கிலிருந்து வடக்கு முகமாக ஓட்டி வந்து ரோட்டில் அமைந்துள்ள மைல் கல்லில் மோதி மேற்படி எதிரி வாகனத்தில் பின்னால் உட்கார்ந்திருந்த அன்பரசனுக்கு நெஞ்சில் பலத்த காயத்தையும் ஏற்படுத்தி அவருக்கு இறப்பை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 304(A) IPC–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என்று கு.வி.மு.ச பிரிவு 173–ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). இவ்வழக்கின் எதிரி, இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, வழக்கிற்கான ஆரம்ப



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:41:46 +0530

முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 279, 337 &304(A) IPC-ன் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, எதிரியிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரி தான் குற்றவாளி அல்ல என மறுத்துரைத்துள்ளார். எனவே, வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய, வழிவகை செய்யப்பட்டது.

3).அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4). <u>அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:</u>

4.1).அ.சா.1 புகார்தாரர் ஆவார். சம்பவம் பற்றியும் புகார்வாக்குமூலம் கொடுத்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 மற்றும் சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சி ஆவார். அ.சா.3 மற்றும் அ.சா.4 சம்பவத்தினை கேள்வியுற்ற சாட்சிகள் ஆவார்கள்.

4.2)அ.த.சா.**5** புலன்விசாரணை அதிகாரி மற்றும் உத்தியோக சாட்சி ஆவார். இவர் அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2** பதிவு செய்து குறித்தும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.4** மற்றும் **அ.த.சா.ஆ.5** மாதிரி வரைபடம் தயார் செய்து குறித்தும் மேலும் பிரேத விசாரணை நடத்தி **பிரேத விசாரணை அறிக்கை** அ.த.சா.ஆ.**6** பெற்றது குறித்தும் சாட்சிகள் விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும் பின்பு பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்று க.விலக்கு அரசு மருத்துவரைப் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.த.சா.ஆ.**7** **பிரேத பரிசோதனை சான்றிதழ்** பெற்றது குறித்தும் பின்பு விபத்து ஏற்படுத்திய **TN 60 K 2415**



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:41:53 +0530

**Hero Honda** என்ற வாகத்தின் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.**8** சமர்ப்பித்த தேனி வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றது குறித்தும் பின்னதாக புலன் விசாரணை முடிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

5).அரசுத்தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள பொருண்மைகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவியபோது, அரசு தரப்பு சாட்சியத்தை எதிரி பொய் சாட்சியம் என்றும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார்.

6).இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு சாட்சியங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

**7.அரசு தரப்பு வாதம்**

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது, அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சியங்களின்படியும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களின்படியும், எதிரி மீதான அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

**8. எதிரி தரப்பு வாதம்**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பு எதிரியின் கவனக்குறைவால் தான் வாகன விபத்து ஏற்பட்டது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்றும் ஆகையால் இவ்வழக்கின் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அழைத்து எதிரியை வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:41:59 +0530

9. <u>தீர்க்கபட வேண்டிய பிரச்சனைக்குரிய கேள்வி</u>

இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 279, 337& 304(A) IPC கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

10. <u>முடிவுக்கான விளக்கம்</u>

10.1) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

10.2)அரசு தரப்பு வழக்கானது எதிரி இருசக்கர வாகனத்தினை அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஓட்டிவந்து அன்பரசன் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தியது என்பதே ஆகும்.

10.03) இந்த வழக்கில் **TN 60 K 2415 Hero Honda** என்ற இருசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.8 மற்றும் பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.6** மற்றும் மற்ற சாட்சியங்களோடு ஒப்புவித்து ஆராய்ந்து பார்க்கையில் சம்பவத்தன்று மேற்படி வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது நிரூபணம் ஆகிறது.

10.04)**அ.த.சா.ஆ.**7 பிரேத பரிசோதனை அறிக்கை மற்ற சாட்சிகளோடு ஆராய்ந்து பார்க்கையில் விபத்தில் அன்பரசன் இறந்தது நிரூபணம் ஆகிறது.

10.05)மற்ற சாட்சியங்களையும் சான்றாவணங்களையும் ஒப்புவித்து பார்க்கையில் எதிரி தான் சம்பவத்தன்று விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் **TN 60 K 2415 Hero Honda** என்ற இருசக்கர வாகனத்தினை ஓட்டினார் என்பதில் எந்த ஐயமும் எழவில்லை. மேற்படி எந்த சாட்சிகளும் விபத்து ஏற்பட்டதை மறுத்தோ எதிரி விபத்துக்குள்ளான வாகனத்தை ஓட்டி வந்ததை மறுத்தோ சாட்சியம் அளிக்கவில்லை. எனவே மேலே



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:42:08 +0530

சொல்லபட்ட விபத்துக்குள்ளான வாகனத்தை எதிரி துரைபாண்டி தான் சம்பவத்தன்று ஓட்டிவந்தார் என்பது நிரூபணம் செய்யப்பட்டதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

10.06)அடுத்ததாக இவ்வழக்கின் குற்றம்சாட்டப்பட்டுள்ள பிரிவுகளின் முக்கிய கூறுகள் இவ்வழக்கில் அமைகிறது என்று ஆராய வேண்டியது அவசியமாய் உள்ளது முதலாவதாக பிரிவுகள் 279, 337& 304(A) IPC இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றத்தை நிரூபணம் செய்ய வேண்டும் என்றால் எதிரியின் அசட்டு மற்றும் அஜாக்கிரதையான செயலால் ஒருவருக்கு இறப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு ஆராய்ந்து பார்க்கையில்

10.7)அ.த.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் **"கடந்த 27.07.2015 ம் தேதி கடமலைக்குண்டு மூக்கம்மாள் இறந்ததற்கு எங்கள் உற்றார் உறவினார் சென்றோம். மாலை 05.40 மணியளவில் கடமலைக்குண்டு க.விலக்கு இடையில் அய்யனார் கோவில் அருகே இருசக்கரவாகனத்தில் துரைப்பாண்டி ஓட்டிச்செல்ல இறந்து போன அன்பரசன் பின்னார் அமர்ந்து சென்றார் இந்த இருசக்கர வாகனத்தின் பின்னால் நான் தனியார் பேருந்தில் வந்து கொண்டிருந்தேன் இருசக்கர வாகனம் அதிவேகமாக சென்று மைல்கல் மேல் மோதியது விபத்தில் இறந்துபோன அன்பரசனுக்கு வலது பக்க மேல் தோள்பட்டையிலிருந்து இடுப்பு பகதி வரை காயம் இருந்தது 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்து க.விலக்கு மருத்துவ மனையில் சேர்த்தேன். மாலை 06.20 மணியளவில் க.விலக்கு மருத்துவமனையில் இறந்துவிட்டார்"** என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 அ.சா.1 ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 மற்றும் அ.சா.4 சம்பவத்தினை கேள்வியுற்ற சாட்சிகள் ஆவார்கள்.



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:42:16 +0530

10.08) மாண்புமிகு உச்ச நீதிமன்றம் ரவிக்கபூர் எதிர் ராஜஸ்தான் அரசு **[Crl. Appeal No. 1838/2009]** என்ற வழக்கில் பின்வருமாறு கூறியுள்ளது **"10. In order to examine the merit or otherwise of contentions (b) and (c) raised on behalf of the appellant, it is necessary for the Court to first and foremost examine (a) what is rash and negligent driving; and (b) whether it can be gathered from the attendant circumstances. Rash and negligent driving has to be examined in light of the facts and circumstances of a given case. It is a fact incapable of being construed or seen in isolation. It must be examined in light of the attendant circumstances. A person who drives a vehicle on the road is liable to be held responsible for the act as well as for the result. It may not be always possible to determine with reference to the speed of a vehicle whether a person was driving rashly and negligently. Both these acts presuppose an abnormal conduct. Even when one is driving a vehicle at a slow speed but recklessly and negligently, it would amount to 'rash and negligent driving' within the meaning of the language of section 279 IPC.** எனவே எதிரி வாகனத்தை வேகமாக ஓட்டினார் என்பதை மட்டும் வைத்து கொண்டு எதிரி அசட்டுத்தனமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்தார் கருத இயலாது. வழங்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை பொறுத்தே முடிவு செய்ய இயலும்.

10.9)இந்தவழக்கின் சாட்சியங்களின் நம்பகத்தன்மையை ஆராய இந்த நீதிமன்றம் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம் **வடிவேலு தேவர் எதிர் மதராஸ் மாகாணம்** என்ற வழக்கில் பின்வருமாறு வழங்கிய வழிகாட்டுதல்களை துணைகொள்கிறது **"*Hence, in our opinion, it is a sound and well- established rule of law that the court is concerned with the quality and not with the quantity of the evidence necessary for, proving or disproving a fact. Generally speaking, oral testimony in this context may be classified into three categories, namely: (1) Wholly reliable. (2) Wholly unreliable. (3) Neither wholly reliable nor wholly unreliable In the first category of proof, the court should have no difficulty in coming to its conclusion either way-it may convict or may acquit on*



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:42:23 +0530

***the testimony of a single witness, if it is found to be above reproach or suspicion of interestedness, incompetence or subornation. In the second category, the court, equally has no difficulty in coming to its conclusion. It is in the third category of cases, that the court has to be circumspect and has to look for corroboration in material particulars by reliable testimony, direct or circumstantial"*** இவ்வாறாக சாட்சியங்களை மூன்றாக வகைப்படுத்தி உள்ளது. இவ்வழக்கின் சங்கதிகளையும் சாட்சியங்களையும் சூழ்நிலைகளையும் சான்றவனைகளையும் ஒப்புவித்து பார்க்கையில் புகார்தாரான அ.சா.*1* தனது முதல் விசாரணைக்கு மாறாக தன்னுடைய குறுக்கு விசாரணையில்" **இந்த வழக்கு விபத்து தொடர்பாக உறவினார் ஒருவர் போன் மூலம் தகவல் கூறினார் என்றார் சரிதான் நான் க.விலக்கு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது மருத்துவர் அன்பரசன் இறந்துவிட்டதாக கூறினார் இந்த வழக்கு தொடர்பாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றார் சரிதான்"** என்றும் சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரான அ.சா.1 சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக அமைந்துள்ளபடியால் அவை முழுவதும் நம்பத்தகுந்ததாக தோன்றவில்லை. எனவே இந்த நீதிமன்றத்திற்கு மற்றொரு சாட்சியத்தின் துணை தேவைப்படுகிறது. அவ்வாறு ஆராய்ந்து பார்க்கையில்

10.10) சம்பவத்தினை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அ.சா.1 ன் சாட்சியத்தினை ஒத்து சாட்சியம் அளித்திருந்தாலும் தனது குறுக்கு விசாரணையில் தனது சாட்சியத்தில்" **இவ்வழக்கு விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா அல்லது யாராவது போன்மூலம் தகவல் சொன்னார்களா என்றால் எனக்கு மருத்துவமனையில் இருந்து தொலைபேசி மூலம் தகவல் கிடைத்தது யார் மூலம் அழைப்பு வந்தது என்று எனக்கு தெரியாது இவ்வழக்கு தொடர்பாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்"** என்றும் சாட்சியம்



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:42:30 +0530

அளித்துள்ளார். மேலும் சம்பவத்தினை கேள்வியுற்ற சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் **"இவ்வழக்கு தொடர்பாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்"** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.மேலும் சம்பவத்தினை கேள்வியுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில் **"அ.சா.1 அய்யனார் கோவில் அருகே விபத்து நடந்துவிட்டது வா என்று கூறினார் "** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10.11)இவ்வாறு அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சியங்களின் வாயிலாக எதிரியின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று புலன்கொள்ளும்படி அமையபெறவில்லை. மேலும் 1 முதல் 4 வரையிலான சாட்சியங்களில் எதிரி வாகனத்தை கவனக்குறைவாகவோ அஜாக்கிரதையாகவோ ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று சாட்சியங்கள் அளிக்கவில்லை.

10.12) எனவே அ.த.சா.5 வழக்கை புலன்விசாரணை செய்த அதிகாரி அவர்களின் சாட்சியங்களை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரி கவனக்குறைவாகவோ வேகமாகவோ அஜாக்கிரதையாகவோ ஓட்டி வந்து அன்பரசன் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தினார் என்று கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக தோன்றவில்லை.

10.13)அரசு தரப்பு ஒரு வழக்கை நிரூபணம் செய்ய வேண்டும் என்றால் அந்த வழக்கில் எதிரி தான் குற்றத்தை செய்தார் என்று சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபணம் செய்ய வேண்டும். மேற்கூறிய சாட்சியங்களையும் வழக்கின் சூழ்நிலைகளையும் வைத்து பார்க்கும் பொழுது எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஒட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே பிரிவுகள் 279, 337& 304(A) IPC இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:42:37 +0530

குற்றத்தின் முக்கிய கூறுகளை அரசு தரப்பு போதிய சாட்சியங்களுடன் நிரூபணம் செய்து விட்டதாக இந்த நீதிமன்றம் கருதவில்லை .ஆகையால் இவ்வழக்கில் எழும் சந்தேகத்தில் பலனை எதிரிக்கு அளித்து எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 279, 337 & 304(A) IPC இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானிக்கப்படுகிறார்கள்.

11.<u>முடிவு</u>

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 279, 337 & 304(A) IPC ன் கீழான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு இடமில்லாமல் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் எனவே, எதிரியை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல என்றும் தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 255 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

12.இவ்வழக்கு வழக்கு தடய சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை ஆகையால் வழக்கு தடய சொத்து குறித்து உத்தரவு இல்லை.

13.எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் வைத்து, அவையறிய பகரப்பட்டது.

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:42:46 +0530

நீதித்துறை நடுவர்
ஆண்டிபட்டி.

<u>குறிப்பு:</u>

1. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது,

2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை,

3. விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்து முன்னிலையானார்.

1. அரசுத்தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு. முருகன் |
| 2 | அ.சா.2 | திரு.ஈஸ்வரன் |
| 3 | அ.சா.3 | திருமதி.பாண்டியம்மாள் |
| 4 | அ.சா.4 | திரு.முருகன் |
| 5 | அ.சா.5 | திரு.ரவீந்திரன் |

2). அரசு தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| 2 | அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |
| 3 | அ.சா.ஆ.3 | சட்டப்பிரிவு மாறுதல்அறிக்கை |
| 4 | அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் |
| 5 | அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| 6 | அ.சா.ஆ.6 | பிரேத விசாரணை அறிக்கை |
| 7 | அ.சா.ஆ.7 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| 8 | அ.சா.ஆ.8 | TN 60 K Hero Hoda என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

3). அரசுத் தரப்பு சான்று பொருள்: இல்லை.

4). எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள்: இல்லை.

FAZIL MOHAMED H Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.20 17:42:53 +0530

நீதித்துறை நடுவர்

ஆண்டிபட்டி.